**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசித் திங்கள் 08–ம் நாள்
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை
******

**அசல் வழக்கு எண். 54/2019ல் இடைமனு எண்.01/2024**

வீரமணி .....மனுதாரர்/வாதி

...எதிர்...

1. ஹஜ்ஜிமுகம்மது
2. ராஜாமுகம்மது ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

பிராதை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–6 விதி 17–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:54:59 +0530

வழக்கில் பிரதிவாதிகள் கட்சியாடி, விசாரணைக்கு வந்து மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை தொடங்கப்பட்டு வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்கு கெடு போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள இந்நிலையில் பிராதினை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து மேல்நடத்த வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது.

**திருத்தம் :1:**–வழக்குரை பாரா 5–ல் கண்டுள்ளவாறு 5– க்கு பிறகு 5(அ) வாக கடந்த 24–10–2011 முதல் வாதியிடம் வாடகை பெறுவதினை எதிர்வாதி நிறுத்தி கொண்டதால் வழக்கு சொத்தினை பொறுத்து வாதியே பகுதிதாரர் எனவும் **திருத்தம்:2:**– வழக்குரை பாரா–6–ல் முதல் வரியில் வழக்கு சொத்து என்று வரும் இடத்தில் அதற்கு அடுத்து முந்தைய எனவும் வழக்குரையில் வரும் சட்டத்திற்கு முரணான என்ற வாசகத்தை நீக்கவும், **திருத்தம்:3**:– பொருமான விபரம் 11–ல் முதல் பொருமானத்திற்கு 1 எனவும் இரண்டாவதாக வழக்கு சொத்தினை பொறுத்து வாதி பகுதிதாரர் என விளம்புகை பரிகாரம் பெற, வாதியின் சொந்த பொருமானம் வழக்கு சொத்து கோவில் சொத்து என்பதால் பொருமானம் நிர்ணயம் செய்ய இயலாது என்பதால் அதிகபட்ச பொருமானம் ரூ.5000/– என நிர்ணயம் செய்து நீ.ம.க.ச.பிரிவு 25(b)–ன் கீழ் ரூ.150/– இவ்வழக்குரையுடன் செலுத்தி வைக்கப்படுகிறது எனவும் **திருத்தம்:4:**– வழக்குரை பாரா 10–ல் இரண்டாவது வரியில் வரும் ரூ.1000/–என்பதை நீக்கிவிட்டு ரூ.6000/– எனவும் அதே வரியில் 27(c)க்கு பிறகு 25(b) எனவும் 30 என்பதை நீக்கிவிட்டு ரூ.180/– எனவும் **திருத்தம்:5:**– வழக்குரை 11–வது பாராவில் கூடுதல் ரூ.1000/– என்பதை நீக்கிவிட்டு ரூ.6000/– எனவும் 30 என்பதை நீக்கிவிட்டு ரூ.180/– எனவும், **திருத்தம்:6**:– வழக்குரை பாரா 12–ல் 1–க்கு பிறகு 1(அ).வாக வழக்கு சொத்தினை பொறுத்து வாதியே பகுதிதாரர் என விளப்புகை பரிகாரம் வழங்கியும் எனவும், மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவிடக் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:55:06 +0530

**<u>2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் அடாப்ட் செய்துகொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

(i) இந்த எதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் கண்ட பிற சங்கதிகளை எதிர்மனுதாரர்/பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றார். அதனை மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. வாதி தரப்பில் முதன்மை விசாரணை விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய கெடு போடப்பட்டுள்ள நிலையில் இந்த திருத்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடியது அல்ல. தாவா சொத்திற்கு வாதி வாடகைதாரரே ஆவார். தாவா சொத்தின் வாடகைதாரர் வாதி என்று வாதி பிராதில் ஒத்துக்கொண்டுள்ளார். தாவா சொத்திற்கு வாதி பகுதிதாரர் ஆகமாட்டார். வழக்கு சொத்து கோயில் சொத்து கிடையாது. வழக்கு சொத்திற்கு 1–ம் பிரதிவாதி உரிமையாளர் ஆவார். தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதியின் வாடகைதாரரே வாதி ஆவார். எனவே வழக்கு சொத்திற்கு வாதியே பகுதிதாரர் என விளம்பல் செய்ய இயலாது. தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்ற 1–ம் பிரதிவாதி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் RLTOP. No.3/22–மனு தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவில் மனுதாரர்/வாதிக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல. மேற்கண்ட காரனங்கள் அடிபடையில் இந்த மனுவை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:55:12 +0530

**<u>5. தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் கட்சியாடி, விசாரணைக்கு வந்து மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை தொடங்கப்பட்டு வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்கு கெடு போடப்பட்டுள்ள நிலையில் பிராதினை திருத்தம் செய்து மேல்நடத்த வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது என்று கூறி சில திருத்தங்கள் குறிப்பிட்டு மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், தாவா சொத்திற்கு வாதி வாடகைதாரர் என்று பிராதில் வாதி ஒத்துக்கொண்டுள்ளார். தாவா சொத்திற்கு வாதி பகுதிதாரர் ஆகமாட்டார். வழக்கு சொத்து கோயில் சொத்து கிடையாது. வழக்கு சொத்திற்கு 1–ம் பிரதிவாதி உரிமையாளர் ஆவார். தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதியின் வாடகைதாரரே வாதி ஆவார். எனவே வழக்கு சொத்திற்கு வாதியே பகுதிதாரர் என விளம்பல் செய்ய இயலாது என்றும் தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்ற 1–ம் பிரதிவாதி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் RLTOP. No.3/22–மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு வாதிடப்பட்டது.

(iii) மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:55:18 +0530

வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:55:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.25 18:55:30 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
அசல் வழக்கு எண்.54/2019ல்
**இடைமனு எண்.01/2024**
நாள்.25.10.2025.